දුරකථන ) 0112669192 ,0112675011
தொலைபேசி 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 ,0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம்

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministryof Health

මගේ අංකය )
எனது இல )
My No. )CF/EXD/03/2024

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )2024/03/.27
Date )

பொதுச் சுற்றுநிருப இலக்கம் : 02-57/2024

மாகாண சுகாதார செயலாளர்கள்,

பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு

பணிப்பாளர் தேசிய வைத்திய சாலை - கண்டி

மத்திய அமைச்சின் கீழ் வரும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

உரிய நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,

## சுகாதார அமைச்சின் (MT-06) சம்பள அளவுத்திட்டத்திற்கான துணை மருத்துவச் சேவை பல் சிகிச்சையாளர் சேவையில் தரம் II சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை 2024 (முதலாவது தடவை)

சுகாதார அமைச்சின் (MT-06) சம்பள அளவுத்திட்டத்திற்கான துணை மருத்துவச் சேவை பல் சிகிச்சையாளர் சேவையில் தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை **2024.05.18** மற்றும் **2024.05.19** திகதிகளில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

**02. தகைமைகள்**

பல் சிகிச்சையாளர் உத்தியோகத்தர் சேவையின் தரம் II பிரிவிற்கு நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் இதுவரை இப் பரீட்சையினை பூரணப்படுத்தியிராத உத்தியோகத்தர்களும் மாத்திரம் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும் : 2024.04.22 ஆம் திகதியன்று தரம் II இற்கு நியமிக்கப்பட்டு / உள்வாங்கப்பட்டு உரிய நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களை மாத்திரம் அனுப்பி வைக்கவும்.** (தரம் II ற்கு நியமிக்கும் நியமனக் கடிதத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டியது கட்டாயமாகும்)

**03. விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" , இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு –10 என்னும் முகவரிக்கு **2024.04.22** ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் **"பல் சிகிச்சையாளர் சேவையில் தரம் II சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2024 (முதலாவது தடவை)"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்கள தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா. 110 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட ("9x4") கடித உறைகள் 01 இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டுமவிண்ணப்ப முடிவுத்திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

கவனிக்கவும் : மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் **A4** தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தாயரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 - 04 தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 05 - **09** தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**04 பரீட்சைக் கட்டணம்**

4.1 பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் விடயம் ஒன்றிற்கு ரூபா 25.00 பெறுமதியுடைய முத்திரையினை ஒட்டி அதன்மீது கையொப்பத்தினையும், திகதியினையும் இட்டு உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

4.2 இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எக்காரணத்தினைக் கொண்டும் வேறு பரீட்சையொன்றிற்கு மாற்றவோ, மீள வழங்கப்படவோ மாட்டாது.

**05 பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ளல்**

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அப் பரீட்சை அனுமதி அட்டைகளினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றேல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்படமாட்டாது.

5.2 ஆண், பெண் பரீடசார்த்திகளினால் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ)தேசிய அடையாள அட்டை
(ஆ)சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை
(இ)வலுவுடைய சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ)வலுவுடைய கடவுச் சீட்டு

**06. பரீட்சைத்திட்டம்:**

இப் பரீட்சை திணைக்களப் பரீட்சை, வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை எனும் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. திணைக்களப் பரீட்சை எழுத்து, பிரயோகம், வாய்மொழி எனும் மூன்று பிரிவுகளை கொண்டதுடன் ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதன் பொருட்டு ஒவ்வொரு பிரிவிற்கு ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை தாபனவிதிக்கோவையும், நடைமுறை விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்கள் எனும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவின் பொருட்டும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதன்பொருட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஒரே அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையினை பூரணப்படுத்திக்கொள்ள முடியும். **முதன்முறையாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அனைத்துப் பிரிவுகளிற்கும் விண்ணப்பிக்கவேண்டும்.**

**07. பரீட்சைப் பாடத்திட்டம்**

**07.1 திணைக்களப் பரீட்சை**

**7.1.1 விடயப்பரப்புடன் தொடர்பான அறிவு வினாத்தாள்**

**இப்பரீட்சைக்கான நேரம் 03 மணித்தியாலங்களாகும். கட்டுரை வடிவிலான 08 வினாக்களைக் கொண்டுள்ளது. அதில் விரும்பிய ஏதேனும் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.**

பாடத்திட்டம்

1) பல் இரசாயனகூட உபகரணங்கள், கருவிகளை உபயோகித்தல் மற்றும் அவற்றின் கவனிப்பும்
2) பல்வகை ஜிப்சங்களை உபயோகித்து பல் அச்சு மாதிரிகளை உருவாக்குதல்
3) மாதிரிகளை கோணவடிவில் நேர்த்திசெய்தல்

4) ரேசின்ஸ் மற்றும் இயைவுத் தகடுகள் கொண்டு விஷேட தட்டு (Special Tray )தயாரித்தல்

5) மெழுகினை உபயோகித்து முழுமையான மற்றும் பகுதியளவிலான பைட் புளொக் (Bite Block) தயாரித்தல்

6) ஆய்வு மாதிரிகளை உருவாக்குதல்

7) முழுமையான பகுதியளவிலான பல் மாதிரி

8) முழுமையான மற்றும் பகுதியவிலான செயற்கை பல் (அச்சிலிருந்து கழற்றுதல், நேர்த்திசெய்தல், மினுக்குதல் (Deflasking, Trimming, Polishing) மற்றும் முடிவுறுத்தல்

9) பெக்ரலின் உபயோகித்து செயற்கைப் பல் திருத்தம் செய்தல், மிள் நிரைப்படுத்தல், மீள அடித்தளம் அமைத்தல், புதிதாக சேர்த்தல் (Re-lining, Re- Basing, Addition)

10) கம்பிகளை வளைக்கும் பயிற்சிகள்

11) கழற்ற முடியுமான பல் இறுக்குச் சாதனங்கள் (Orthodentic Appliances)

12) ரெசின்ஸ் அச்சுகளில் பற்களை செதுக்குதல் (Carving teeth on accurytic dies)

13) ஒப்சுரேடர்ஸ் மற்றும் அறுவைச் சிகிச்சை தட்டுகளை உருவாக்கல் (Obturators & Surgical Plates)

**7.1.2 விடயப்பரப்புடனான பிரயோகப் பரீட்சை**

விடயப் பரப்பிற்கு ஏற்புடையதான எழுத்துமூல வினாத்தாளுக்குரிய விடயப் பரப்பிற்கு அமைய பிரயோகமாக மேற்கொள்ளப்படும் பரீட்சையாகும். நேரம் - பரீட்சையினைப் பொறுத்து வேறுபடும். மொத்தப் புள்ளி 100

**7.1.3 விடயப்பரப்புடனான வாய்மொழிப் பரீட்சை**

விடயப் பரப்பிற்கு ஏற்புடையதான எழுத்துமூல வினாத்தாளுக்குரிய விடயப் பரப்பிற்கு அமைய விடயத்திற்கு ஏற்புடையதும், சேவையில் ஈடுபடும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான வாய்மொழி மூலம் மேற்கொள்ளப்படும் பரீட்சையாகும். நேரம் - 15 நிமிடம். மொத்தப் புள்ளி 100.

**7.2 வினைத்திறமை காண் தடைப் பரீட்சை**

**7.2.1. தாபன விதக்கோவையும்**

இந்த வினாத்தாளுக்கு 02 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுரை வடிவிலான 07 வினாக்களைக் கொண்டுள்ளது. அதில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100. சித்தியடைவதன் பொருட்டு 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

- **தாபன விதிக்கோவையின் கீழ்வரும் அத்தியாயங்களின்படி மற்றும் அரசசேவை ஆணைகுழுவின் நடைமுறை விதிகளின்படி இவ் வினாத்தாள் தயாரிக்கப்படல் வேண்டும். தாபனவிதிக் கோவையின் கீழ் வரும் அத்தியாயங்களின் படி**

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | **XV** | கல்வி , பயிற்சி அல்லது கடமை நிமித்தம் வெளி நாட்டிற்குச் செல்லுதல் |
| அத்தியாயம் | **XVI** | விடுமுறைப் பயணம் (Holyday Travel ) |
| அத்தியாயம் | **XXIII** | விசேட வகையான நோய்கள் காரணமாக அல்லல்படும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள் மற்றும் நிபந்தனைகள். |
| அத்தியாயம் | **XXIV** | சம்பளக் கடன் / முற்பணங்கள் |
| அத்தியாயம் | **XXV** | தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் | **XXVII** | தொடர்பாடல் முறைகள் |
| அத்தியாயம் | **XXVIII** | நிர்வாக நடைமுறைகள் |
| அத்தியாயம் | **XXX** | அரசாங்க ஊழியர்கள் மீதான அரசாங்கத்தின் உரிமைகள் |
| அத்தியாயம் | **XXXIII** | சட்ட ஆலோசனைகளும், சட்ட நடவடிக்கைகளும் |

அத்தியாயம் **XLVII** பொது நடத்தையும், ஒழுக்கமும்
அத்தியாயம் **XLVIII** ஒழுக்காற்று நடைமுறை

7.2.2 நிதிப் பிரமாணங்கள் வினாப்பத்திரம்

இந்த வினாத்தாளுக்கு 02 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுரை வடிவிலான 07 வினாக்களைக் கொண்டுள்ளது. அதில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.

**நிதிப்பிரமாணத்தின் கீழ் வரும் அத்தியாயங்களின் படி**

**அத்தியாயம் VI** - பொது நிதியினைப் பராமரித்தல் / பாதுகாத்தல் (Custody) முதலியன, காசு கட்டு நிதி மற்றும் வங்கிக்கணக்குகள் / பொதுநிதியின் பிணை / முறி, பகுப்பாய்வுச் சபை (Board of Survey) வங்கிப்பற்று, வங்கிக் கணக்குகள்
**(நிதிப்பிரமாணங்கள் 315 - 396 )**

**அத்தியாயம் XIII** - விநியோக வேலைகள், மற்றும் சேவைகள்:- வழங்கல்கள் / பொருட் கொள்வனவு முறைகள் களஞ்சியப் பொருட்களைச் சரிபார்த்தல் களஞ்சியப்படுத்தும் முறை, ஒப்பந்தங்கள், பொருட்கொள்வனவு நடைமுறைகளில் இருந்து விலகுதல்
**(நிதிப்பிரமாணங்கள் 708 - 775)**

08. பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினை தங்களன் நிறுவனத்தில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற் கொள்ளுமாறு இத்தால் கேடடுக்கொள்ளப்படுகின்றிர்கள். இத்த தகவல்களை www.health.gov.lk என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**Web path : www. health. gov.lk ⟶ Staff Access ⟶ Administration ⟶ Examination ⟶ Circulars**

**கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்று நிருபங்களிடையே ஏதாவது ஒவ்வாமை காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்று நிருபமே வலுவுள்ளதாகும்.**

Chamika H. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

ஷாமிக எச். கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளருக்காக.

| EXD | Health Dental Technicians Grade II | அலுவலகப் பாவனையின் பொருட்டு |
|---|---|---|

## மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சின் (MT-06) சம்பள அளவுத்திட்டத்திற்கான துணை மருத்துவச் சேவை பல் சிகிச்சையாளர் சேவையில் தரம் II சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2024 (முதலாவது தடவை)**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்) :-..........................................................

..........................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்தில்) :-

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :- ..........................................................

..........................................................................................

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தரம் II ற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதியும் :- ..........................................................

கடித இலக்கமும் :- ..........................................................

**(தரம் II ற்கு உயர்த்தம் கடிதத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைக்குக)**

(ii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் :- ..........................................................

(iii) தேசிய அடையாள அட்டை இல :- | | | | | | | | | | |

(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :- | | | | | | | | | | | | |

(v) மின்னஞ்சல் முகவரி: ..........................................................

02. தாங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் (√) அடையாளத்தினை இடுக. தோற்ற வில்லையாயின் (X) அடையாளமிடுக.

| | | | |
|---|---|---|---|
| தாபன விதிக்கோவை | ☐ | விடயம் தொடர்பான பிரயோகப் பரீட்சை | ☐ |
| நிதிப்பிரமாணம | ☐ | விடயம் தொடர்பான வாய்மொழிப் பரீட்சை | ☐ |
| விடயம் தொடர்பான எழுத்துப் பரீட்சை | ☐ | | |

03. (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் (தமிழில்) :-..........................................................

(ஆங்கிலத்தில்) :-..........................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் :- ..........................................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசினால் ☐ மாகாண சபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம் :-..........................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டையினை அனுப்புவதன் பொருட்டு பிழையின்றி தெளிவாக தங்களுடைய முகவரி ஸ்ரீ எழுதப்பட்ட 9" X 4" அளவுடைய, ரூபா 110.00 பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட கடித உறைகள் மூன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா? ..........................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) :- ..........................................................

..........................................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) :- ..........................................

..........................................................................................

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) ..........................................

(தாபன விதக்கோவை, நிதிப்பிரமாண வினாத்தாள்களுக்கானது)

05. (அ) இதற்கு முன்னா் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீா்களா? ..............................................................................

(ஆ) தாங்கள் விண்ணப்பிப்பது முதற் தடவையில்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ...................................

| முத்திரைக் கூண்டு |
|---|

06. **விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா........................ பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ள தெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப் படுத்துகின்றேன்.

.................................... ........................................................................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. **தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப் படுத்துகின்றேன்.

.................................... ..................................................

திகதி பெயரும் கையொப்பமும், திகதியும்.

08. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருமதி/செல்வி*......................................................என்பவர் ....................... உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார் என்றும் அவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக உள்ளதால் /முதன் முறையாக இல்லாத* படியால் ரூபா......பெறுமதியான முத்திரை கள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

........................................ ..................................................

திகதி நிறுவனத் தலைவரின் கையொப்பம்

09. **பன்முகப்படுத்தப்பட்ட /விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/ திருமதி/ செல்வி .................................................................... என்பவர் .................... உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்று வதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................

திகதி ..................................................

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /
விசேட பிரிவு தலைவரின் கையொப்பம்
இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.